| Scale | F | Tempo | 192 | Style | March> Ober Walzer |
| --- | --- | --- | --- | --- | --- |

36. சேனைகளின் கர்த்தாவே ஸ்தோத்திரம்

1

சேனைகளின் கர்த்தாவே ஸ்தோத்திரம்
சிருஷ்டி கர்த்தா ஸ்தோத்திரம்
சீக்கிரம் வருபவரே ஸ்தோத்திரம்
சுத்த கண்ணா ஸ்தோத்திரம்
செங்கடலை பிரித்தவரே ஸ்தோத்திரம்
செந்நீர் சிந்தினீர் ஸ்தோத்திரம்
சகாயம் உள்ளவரே ஸ்தோத்திரம்
சாட்சியானவர் ஸ்தோத்திரம்

2

தடைகளை தகர்ப்பவரே ஸ்தோத்திரம்
தஞ்சமானவர் ஸ்தோத்திரம்
திருப்தி ஆக்குபவரே ஸ்தோத்திரம்
தாகம் தீர்ப்பவர் ஸ்தோத்திரம்
தீங்கின்றி காப்பவரே ஸ்தோத்திரம்
தயையுள்ள தேவா ஸ்தோத்திரம்
துக்கம் நீக்குபவரே ஸ்தோத்திரம்
திருத்துவ தேவா ஸ்தோத்திரம்

3

துதிக்கு பாத்திரரே ஸ்தோத்திரம்
துன்பம் தீர்ப்பவர் ஸ்தோத்திரம்
தூங்காமல் காப்பவரே ஸ்தோத்திரம்
தூயாதி தூயா ஸ்தோத்திரம்
தெவிட்டாத தேனமுதே ஸ்தோத்திரம்
தேடி வந்தவர் ஸ்தோத்திரம்
தேவ ஆட்டுக்குட்டியே ஸ்தோத்திரம்
தேற்றரவாளர் ஸ்தோத்திரம்

4

நன்மை தருபவரே ஸ்தோத்திரம்
நல்லவரே ஸ்தோத்திரம்
நம்பிக்கையின் ஒளியே ஸ்தோத்திரம்
நீங்காத தேவா ஸ்தோத்திரம்
நீதியின் சூரியனே ஸ்தோத்திரம்
நேசமானவர் ஸ்தோத்திரம்
நம்பிடும் கன்மலையே ஸ்தோத்திரம்
நித்திய பிதா ஸ்தோத்திரம்